விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 213 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 05 திங்கட்கிழமை (21.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சம்பூர் கடற்கரையில் மனித எச்சங்கள் மீட்பு



(சம்பூர்)

திருகோணமலை, சம்பூர் கடற் கரைப் பகுதியில் மிதிவெடி அகற் றும் இடத்திலி

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு மீளவும் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதை குழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் இரண்டாவது சுற்று இன்று (21) ஆரம்பிக்கப்பட வுள்ளது.

முன்னதாக, விடயம் தொடர் பில் சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர் ஆகியோரின் சமர்ப்

15ஆம் பக்கம் பார்க்க

## மூளாயில் இரு குழுக்கள் மோதல் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம்

### நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவம் குவிப்பு





(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டை - மூளாய்ப் பகுதி யில் நேற்றைய தினம் (20) இரண்டு குழுக்களிடையில் ஏற்பட்ட கோஷ்டி மோதலால், அப்பகுதி போர்க்களம் போல காட்சியளித்துள்ளதுடன் அப் பகுதி பதற்றமாகக் காணப்பட் டது.

15ஆம் பக்கம் பார்க்க

# எமது பரிந்துரைகளை அரசு கவனிப்பதில்லை

## சாடுகிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டில் முன்வைக் கப்பட்ட தனது பரிந்துரை களில் சுமார் முப்பது சதவீதம் மட்டுமே செயற் படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

### பிள்ளையான் தொடர்பான

## முக்கிய ஆவணங்கள் விரைவில் நீதிமன்றுக்கு



03ஆம் பக்கம் பார்க்க

### பிணைமுறி மோசடிக் குற்றவாளி

## அர்ஜுன மகேந்திரனுக்கு சிங்கப்பூரில் உயர் பதவி



கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி மோச டியில் குற்றம் சாட்டப்பட்ட முன் னாள் மத்திய வங்கி ஆளுநர்

15ஆம் பக்கம் பார்க்க

## பலாலி இராஜராஜேஸ்வரியை வழிபட இராணுவம் முட்டுக்கட்டை

### பொதுமக்கள் கடும் விசனம்

(பலாலி)

பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய சூழல் கடுமை யான இராணுவ கண்காணிப் பின் கீழ் உள்ளதாகவும், நேர மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள மையால் ஆலயத்திற்குச்

15ஆம் பக்கம் பார்க்க

## நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது செய்யத் திட்டம் வருகிறது

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது செய்வ தற்கான ஒரு திட்டத்தை விரைவில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தயாராகி வருவதாக அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது செய் வோம் எனக் கடந்த தேர்தல் பிரசாரங்களின்போது தேசிய மக்கள் சக்தி கூறியிருந்தது.

15ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னதாக சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும்

## இல்லையேல் பொறுப்புக்கூறல் இல்லாதுபோகும்

## கஜேந்திரகுமார் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

ஜெனிவா கூட்டத்திற்கு முன்னர் பாதிக்கப்பட்ட தரப்பினரின் கோரிக்கைகளை முன்வைப்பதன் ஊடாகக் கடுமையான சர்வதேச அழுத்தத்தை கொடுக்கும் செயல் வடிவத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கம் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற கலந் துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழினப் படுகொலைக்கு பொறுப்புக் கூற வைப்பது தொடர்பாக ஒரு நிலைப்பாட்டுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் , பொது அமைப்புகள் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு கலந்துரையாட அழைப்பு விடுத்தோம்.

நாம் அழைப்பு விடுத்தவர்களில் தமிழரசுக் கட்சியினர் சமூகமளிக்கவில்லை, ஏனைய கட்சியில் இருந்து அவற்றின் பிரதிநிதிகள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் , சிவில் சமூகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இனப் படுகொலைக்குப் பொறுப்பு கூற வைத்தல் என்பது ஜெனிவாவுடன் முடக்கப்பட்டு விடக் கூடாது, பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றனர். அதனை அவ்வாறே விட்டு விட முடியாது. சாட்சியங்களை இழந்து வருகிறோம். இந்த நிலைமை தொடருமாயின் பொறுப்புக்கூறல் முற்று முழுதாக இல்லாமல் போகும் அபாயம் ஏற்படும்.

அதேவேளை ஐ.நா அலுவலகம் இந்த அரசாங்கத்திற்கு அங்கீகாரத்தை தேடிக்கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகிறது என்ற பரவலான குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் உள்ளது.

அதேவேளை ஐ. நாவை பலவீனப்படுத்தும், செயற்பாட்டிலும், பொறுப்புக் கூறல் செயற்பாட்டை முடக்கவும் இந்த அரசாங்கம் புதிய யுக்திகளைக் கையாளுகின்றன.


இது தொடர்பில் ஐ.நா மனித உரிமை ஆணைக் குழு மற்றும் மனிதவுரிமை ஆணையாளர் அலுவலகம் என்பவற்றில் முறைப்பாடுகளைக் கையளிக்க உள்ளோம்.

கடந்த 2021ஆம் ஆண்டு அனைத்துக் கட்சிகள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட கடிதத்தில் இருந்து, அதன் முக்கியமான உள்ளடக்கங்களை பெற்று, தற்போதைய காலச் சூழலுக்கான கோரிக்கைகளையும் உள்ளடக்கி புதிய கடிதத்தை தயாரிக்கவுள்ளோம்.

இதன் மூலம் தமிழ் மக்களின் உண்மையான கோரிக்கை இவை தான் எனக் கூறுவது மாத்திரமின்றி அதற்குச் செயல் வடிவத்தைக் கொடுக்க விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், மக்களை அணி திரட்டும் செயற்பாடுகளையும் செய்யவுள்ளோம் என்றார்.(ந-7)

# தமிழர்களை அடக்கி ஒடுக்கவே பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுகிறது

## ஜே.வி.பியின் பின்னடிப்புக்கு சிறீதரன் எம்.பி விசனம்



(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டமானது கடந்த 46 ஆண்டுகளாகத் தமிழர்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது எனவே அதனைத் தாமதமின்றி முழுமையாக நீக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டு 46 வருடங்கள் நிறைவடைந்துள்ளதை முன்னிட்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1979 ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாகக் கொண்டு வரப்பட்ட பங்கரவாதத் தடை ச்சட்டம் தற்போது வரையில் அமுலில் உள்ளது. குறித்த சட்டமானது, ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்ட நோக்கம் வேறாக இருந்தாலும் பிற்காலத்தில் வடக்கு, கிழக்கு உட்பட இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களை இலக்கு வைத்தே பயன்படுத்தப்பட்டது.

குறிப்பாகத் தமிழர்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்காவே இச்சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பயன்படுத்தப்பட்டும் வருகின்றது.

இந்தச் சட்டத்தின் வலிகளையும், வேதனைகளையும் சுமந்த தரப்பாக அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தினர் உள்ளனர். அவர்கள் தற்போது அந்தச் சட்டத்தினை அமுலில் வைத்திருப்பதற்கு முனைவதானது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

தேர்தல் காலத்திலும் அதற்கு முன்னரும் ஜே.வி.பியினர் பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தார்கள்.

தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றுச் சட்டத் தினைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

ஜே.வி.பியின் இந்த மாற்றமானது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும். ஆகவே ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச தரப்புக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் வரையில் உரிய அழுத்தங்களை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும் என்றார். (ந-7)

## எமது பரிந்துரை...

தனது அறிவுறுத்தல்களை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடியாது என்றும், இதன் காரணமாக, குறித்த பரிந்துரைகளை அரச நிறுவனங்கள், செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனங்கள் மற்றும் சட்ட பூர்வ சபைகளுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நடைமுறை என்ற போர்வையில் தமது பரிந்துரைகளைச் செயல்படுத்தாமல் இருப்பது நாட்டின் சட்டத்திற்கு எதிரானது என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இதனை மையப்படுத்தி, தமது பரிந்துரைகளைச் செயற்படுத்தாத, அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சியில் உள்ள இரணை தீவை அணுகுவதற்குத் தடை விதிக்கப்பட்ட ஒரு குடிமகன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த பின்னர், 2023 டிசம்பர் 8 ஆம் திகதியன்று, குறித்த தீவுக்குள் பொதுமக்கள் நுழைவதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியது.

இது தொடர்பில், அந்தப் பகுதியில் பணிகளில் ஈடுபட்டுள்ள கடற் படையினருக்கு எழுத்துபூர்வ அறிவுறுத்தல்களை வழங்கவும் ஆணைக்குழு உத்தரவிட்டது.

இருப்பினும், "தேசியப் பாதுகாப்பு" என்று கூறி, கடற்படை அந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்தத் தவறிவிட்டது.

இந்தநிலையில் குறித்த செயற்பாடு, திருப்திகரமாக இல்லை என்று உணர்ந்த பின்னர், ஆணைக்குழு புதிய சுற்றறிக்கையை வெளியிட்டதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் கெஹான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

(ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையான் தொடர்பான முக்கிய தகவல்கள் விரைவில்!



## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



**(கொழும்பு)**
**பிள்ளையான் எனப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தன் தொடர்பான சில விடயங்கள் விரைவில் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஆனந்த விஜேபால ஏப்ரல் 21 தாக்குதல்கள் குறித்து பிள்ளையான் எனப்படும் சிவனேசத்துறை சந்திரகாந்தன் முன் கூட்டியே அறிந்திருந்தார் என்ற விடயத்தை நான் அண்மையில் பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டிருந்தேன்.

அதற்கமைய, நீதிமன்றத்துக்கு கண்டறியப்பட்ட விடயங்களை முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றில் அவற்றை முன்வைத்ததன் பின்னர், நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

பிள்ளையானிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் அதேநேரம், ஏற்கனவே விசாரணைகளில் வெளிவந்த அல்லது கண்டறியப்பட்ட விடயங்களை நீதிமன்றுக்கு முன்வைக்க வேண்டியுள்ளது. இந்தநிலையில், தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெறும் நிலையில், விசாரணைகளில் கண்டறியப்பட்ட சில விடயங்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்த முடியாது என தெரிவித்துள்ளார். (நி)

## நாட்டைவிட்டு வெளியேறிய 1489 மருத்துவர்கள்

(கொழும்பு)

2022 முதல் 2024 வரையிலான மூன்று ஆண்டு காலப் பகுதியில், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, இலங்கையின் ஆயிரத்து நானூற்று எண்பத் தொன்பது மருத்துவர்கள் நாட்டை விட்டுவெளியேறியுள்ளனர்.

இதன் காரணமாக, அரசுக்கும், வரி செலுத்து வோருக்கும் 41.5 மில்லியன் டொலர் நிதி இழப்பு ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவர்களின் வெளியேற்றமானது, கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் சுகாதார உட்கட்டமைப்பை சீர்குலைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமான சிறப்புப் பிரிவுகளில் வெற்றிடங்களுக்கு வழிவகுத்துள்ளது.

அத்துடன் மருத்துவக் கல்வியைச் சீர்குலைத்தது என்றும் ஆய்வு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்ட "சர்வதேச சுகாதாரத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ இதழ் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது. (நி)

## அனைத்து ஆசிரியர்களும் பட்டதாரிகளாக இருப்பது கட்டாயம்- பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

அனைத்து ஆசிரியர்களும் பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.



புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பில், தென் மாகாண கல்வி அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்கான நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் ஆசிரியராக நியமிக்கப்படுபவர்கள் கட்டாயமாக ஆசிரியர் பயிற்சி பெற வேண்டும் எனவும், அனைத்து ஆசிரியர்களும் பட்டதாரிகளாக இருப்பது கட்டாயமாகும் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களுக்கு ஏற்ப, கல்வி நிர்வாகத்தில் தேவையான மாற்றங்களைச் செயற்படுத்த ஒரு கல்வி பேரவையை நிறுவுவதற்குத் தாம் முன்மொழிந்துள்ளதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (நி)

## 'அஸ்வெசும' மேன்முறையீடு இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு திட்டத்திற்காக மேன்முறையீடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நிறை வடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை நலன்புரி நன்மைகள் சபை தெரிவித் துள்ளது.

அதன்படி அஸ்வெசும நலன் புரிக் கொடுப்பனவு திட்டத்திற்காக மேன் முறையீடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகின்றது.

தற்போது இரண்டாம் கட்டத்தின் கீழ் அஸ்வெசும பயனாளர்களிடமிருந்து சுமார் 30.000 மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதாக சபை தெரிவித்துள்ளது.

குறித்த மேன்முறையீடுகள் பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேன்முறை யீட்டு குழுவினூடாக மீளாய்வு செய்யப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சதுப்பு நிலங்களில் உள்ள கட்டுமானங்கள் அகற்றப்படும்

### அமைச்சர் கே.டி.லால்காந்த

(கொழும்பு)

சதுப்பு நிலங்களில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களும் அகற்றப்படும் என கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்தார்.



சதுப்பு நிலங்களில் சட்ட விரோத கட்டுமானங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் உள்ள 23 சதுப்பு நிலங்களின் எல்லைகளை தீர்மானிப்பதற்காக, இதை ஒரு தேசிய தேவையாகக் கருதியே அரசாங்கம் ஒரு புதிய திட்டத்தைத் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, எத்தனை எதிர்ப்புகள் மற்றும் தடைகள் வந்தாலும், சதுப்பு நிலங்களில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களும் அகற்றப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

## அரசியலமைப்பு பேரவையில் மாற்றங்களை ஏற்படுத்த திட்டம்?

(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான நியமனங்களில் கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த அரசியலமைப்பு அமைப்புகளின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் நடைமுறை சிக்கல்கள் இருப்பதாக அரசாங்கம் கருதுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேவைகளுக்கு ஏற்ப அரசியலமைப்பு திருத்தங்களை கொண்டு வர அரசாங்கம் முயற்சித்து வருவதாக கூறப்படுகிறது.

அரசாங்கம் திறமையாகச் செயற்பட விரும்புகின்ற போதும், தற்போதுள்ள சில ஆணைக்குழுக்களுடன் திறமையாகச் செயற்படுவது கடினமாக உள்ளது என்று அரசாங்கத்தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு. திருமுருகன் அவர்களின் 64 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இளைய தலைமுறை ஆற்றலாளர்களுக்கான விருது (2025) இம்முறை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட அறுவை சிகிச்சைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய நிபுணர் பா.பாலகோபி மற்றும் யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர் கலாநிதி நா.பிரதீபராஜா ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

# "வடக்கின் நீலங்களின் சமர்" துடுப்பாட்டத் தொடரில் வெற்றி வாகை சூடியது கிளிநொச்சி மத்திய கல்லூரி




14 ஆவது வடக்கின் நீலங்களின் சமர் துடுப்பாட்டப் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியினர் 86 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர்.

வடக்கின் நீலங்களின் சமர் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிக்கும், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிக்குமிடையிலான 14 ஆவது நீலங்களின் சமர் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியிருந்தது.

முதல் நாள் போட்டியில் முதல் இன்னிங்சில் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 134 ஓட்டங்களை பெற்றிருந்தனர். கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்சில் 122 ஓட்டங்களை பெற்றிருந்தனர்.

இரண்டாவது நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சில் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 169 ஓட்டங்களை பெற்றிருந்தனர். கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிக்கு வெற்றி இலக்காக 182 ஓட்டங்கள் நிர்ணயிக்க துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 48.03 பந்துப் பரிமாற்றங்களில் 95 ஓட்டங்களைப் பெற்றவேளை அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 86 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர். இதுவரை நடைபெற்ற வடக்கின் நீலங்களின் சமரில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 05 போட்டிகளிலும் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 04 தடவையும் வெற்றி பெற்றுள்ளது. 5 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

14 ஆவது வடக்கின் நீலங்களின் சமர் துடுப்பாட்டத் தொடரில் சிறந்த பந்து வீச்சாளராக இந்துக் கல்லூரி அணியின் வீரர் கே.கரிசாந்தன், சிறந்த துடுப்பாட்ட வீரராக மத்திய கல்லூரி அணியின் வீரர் ஜெ.மதுஷன், சிறந்த களத்தடுப்பாளராக மத்திய கல்லூரி அணி வீரர் என். சாருஜன், தொடரின் ஆட்டநாயகனாக மத்திய கல்லூரி அணி வீரர் ஜீ.கௌசிகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (3-316)

# தடகளத்தில் சம்பியனானது யாழ்.இந்துக் கல்லூரி



வடமாகாணம் மற்றும் அநுராதபுர மாவட்டத்தினை இணைத்து பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கம் நடத் திய 54 ஆவது சேர் ஜோன் ராபட் மெய்வல்லுநர் போட் டிகள் கடந்த புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெற்றது.

இதில் கனிஷ்ட பிரிவின ருக்கான மெய்வல்லுநர் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 4 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 1 வெண்கலப் பதக்கங்களுடன் 7 திறமைச் சான்றிதழ்களையும் பெற்று 76 புள்ளிகளுடன் முதற் தடவையாக சம்பியனாகியது.

இப்போட்டியில் 72 புள்ளிகளுடன் இரண்டாவது நிலையை அநுராதபுரம் லைசியம் சர்வதேச பாடசாலையும் மூன்றாவது நிலையை மன்னார் புனித சவேரியார் கல்லூரியும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் குவியும் முறைப்பாடுகள்

(கொழும்பு)

இந்த ஆண்டு இதுவரை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு இந்த ஆண்டில் 2,138 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில், 44 சோதனைகள் நடத்தப்பட்டு 31 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், தொழிலாளர், அதிகாரிகள் மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# யாழில் 'துளிர்' செயற்றிட்டம்

(சாவகச்சேரி)



தற்சார்புப் பொருளாதாரத்தை யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே ஊக்குவிக்கும் விதமாக வட மாகாண கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் உதரம் அறக் கட்டளை ஆகியன இணைந்து துளிர் செயற்றிட்டத்தினை முன்னெடுத்து வருகின்றன.

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் துளிர் செயற்றிட்டத்திற்காக ஏழு கோட்டங்களை உள்ளடக்கிய பத்து பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் ஆரம்ப கட்டமாக அண்மையில் யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலைகளின் மாணவர்களுக்கு வெண்டிச் செடி வழங்கப்பட்டு துளிர் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும் இதன் தொடர்ச்சியான செயற்பாடாக ஏனைய பாடசாலைகளுக்கும் துளிர் செயற்றிட்டம் எதிர்வரும் தினங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)


# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- தெல்லிப்பளை உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :- **குகானந்தசர்மா கணேசராஜசர்மா பெண் ராகினி**
விண்ணப்பதாரர் பெயர் :- குகானந்தசர்மா கணேசராஜசர்மா பெண் ராகினி
முகவரி :- உடுவில் தெற்கு, சுன்னாகம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 17, தெல்லிப்பளை கட்டுவன் வீதி ஆதன இல. 90/10 இல் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 09.03.2023 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் திரு.நாகேந்திரன் பார்த்தீபன் அவர்கள் முகதாவில் இலக்கம் 1235 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.அருள்நேசன் அவர்களால் அளந்து வரைந்த 4575 ஆம் இலக்க 01.01.2023 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு- 1 ஆக காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை இறை "தம்பத்தனை" நிலப்பரப்பு இரண்டும் குளி பதினொன்று தசம் எட்டு எட்டு (நில.பர 2. குளி 11.88) வீடும் இது தெல்லிப்பளை (J/228) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்.

கிழக்கு :- பத்மநாதன் மனைவி தனலட்சுமியின் ஆதனமும் பாதையும்
வடக்கு :- பாதையும் தவச்செல்வன் செந்தாரனின் ஆதனமும்
மேற்கு :- திலகரஞ்சிதத்தின் ஆதனமும், தம்பாதனை செல்லப்பிள்ளையார் ஞானவைரவர் கோவிலுக்குரிய ஆதனமும்
தெற்கு :- தம்பாதனை செல்லப்பிள்ளையார் ஞானவைரவர் கோவிலுக்குரிய ஆதனமும் செல்வராசா மனைவி சிறிசாந்தியின் ஆதனமும்

மேற்குறித்த ஆதனத்தை **குகானந்தசர்மா கணேசராஜசர்மா பெண் ராகினி** என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சிவகுமாரன் சிவானந்தன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(4852)



# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதனப் பெயர் மாற்றமும் ஆதன ஒருங்கிணைப்பும்

சாவகச்சேரி நகராட்சி மன்ற ஆளுகைக்குட்பட்ட வட்டாரம்- 06, யாழ் வீதி, 135/1, 135/2 எனும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் சிவஞானம் பெண் செல்வராணி என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை நுணாவில் கிழக்கு , நுணாவில் மாணிக்கம் தியாகராஜா அல்லது கனகராசா பெண் கண்மணியின் மகளான சின்னத்துரை மருதப்பு பெண் செல்வராணிக்கு பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் டானியல் சிவகுரு முன்பாக, 5764/10.10.1966 இலக்க உறுதி மூலம் சீதனமாக வழங்கியுள்ளார். மேலும் நுணாவில் கிழக்கு மாணிக்கம் கனகராசா மகள் செல்வராணி அதே இடத்தை சேர்ந்த மாணிக்கம் கனகராசா மகள் தங்கராணிக்கு பிரசித்த நொத்தாரிசு S.P மயில்வாகனம் முன்னிலையில் அறுதி உறுதி இலக்கம் 3877/07.05.1980 மூலம் அறுதியாக வழங்கியுள்ளார்.

பின்னர் செல்லையா சத்தியசீலன் பெண் சிவாஜினி என்பவர் தனது தாயார் 2022 ஆம் ஆண்டு மார்கழி மாதம் மரணமடைந்துள்ளதாகவும் தனது தாயாரின் ஆதனம் தனக்கே முழு உரித்து உள்ளதெனவும் தானே ஒரே ஒரு வாரிசு எனவும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் உறுதி இலக்கம் 575/14.11.2023 மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் சுகுமார் அனுசன், சுகுமார் பிரியா ஆகியோர் தங்களின் காலஞ்சென்ற தாயாராகிய செல்வராணியின் ஆதனம் என வெளிப்படுத்தி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் உறுதி இலக்கம் 570/12.10.2023 மூலம் நன் கொடையாக மேற்குறித்தவர்களின் சகோதரியாகிய செல்லையா சத்திய சீலன் பெண் சிவாஜினிக்கு வழங்கியுள்ளார்கள்.

பின்னர் செல்லையா சத்தியசீலன் பெண் சிவாஜினி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் உறுதி இலக்கம் 602/29.06.2024 மூலம் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துவதாவது.

**ஆதன விபரம்**

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட J/307 நுணாவில் மத்தி கிராம சேவகர் பிரிவிற்குப்பட்ட "பாவட்டாங்காடுவளவு" என்ற ஆதனம் ஆனது எங்களின் 2ஆம் பெயரின் தாயாராகிய செல்வராணி என்பவரிற்கு பிரசித்த நொத்தாரிசு இ.டா.சிவகுரு முகதாவில் 1966.10.10 ஆம் திகதிய 5764 ஆம் இலக்கத்தில் முடித்த சீதன உறுதி மூலம் எனது தாயாருக்கு வந்தடைந்தது எனவும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் உறுதி இலக்கம் 575/14.11.2023 வெளிப்படுத்தல் உறுதி மூலம் என்னை வந்தடைந்தது எனவும் இதே நொத்தாரிசு முகதாவில் உறுதி இல. 570/12.10.2023 மூலம் நன்கொடையாக என்னை வந்தடைந்தது என்றும் விபரித்துள்ளார்.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பகுதி, சாவகச்சேரி கோயிற்பற்று, நுணாவில் இறை , சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு, J/307 நுணாவில் மத்தி கிராம சேகவர் பிரிவிற்குட்பட்ட "பாவட்டாங்காடு வளவு" வீடும் பயிர் வகைகளும் நிலப்பரப்பு 3 குழி 10 1/2 விஸ்தீரணமுடைய காணியும் வீடும் செய் பயிர்களும்.

இது தற்போது நில அளவையாளர் ஏ.அருள்நேசன் அவர்களால் 28.04.2024 ஆம் திகதிய 5049 ஆம் இலக்க படத்தில் துண்டு 1 நிலப்பரப்பு 2 குழி 10.41 இந்த நிலப்பரப்பு இரண்டு குழி பத்து தசம் நான்கு ஒன்றுக்கும் எல்லை

கிழக்கு - ஜெயபாலசுந்தரம் கஜானனின் ஆதனம்
வடக்கு - ஜெயபாலசுந்தரம் கஜானனின் ஆதனம்
மேற்கு - ஒழுங்கை
தெற்கு - ஒழுங்கை

இதடங்கலும் இதன் கிழக்குப்பக்கமாக விஸ்வலிங்கம் பெண் தங்கம்மாவின் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் கந்தையா பெண் சின்னம்மாவுக்கும் விசுவலிங்கம் பெண் தங்கம்மா வுக்கும் உரிய காணிக்கூடாக வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதைச்சேர்ந்தவைகளும்

தற்போது ஜெயபாலசுந்தரம் கஜானன் பெண் சிந்துஜா சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய தக்ஷாமினி நவநாதன் முன்னிலையில் நிறைவேற்றிய 606/24.07.2024 ஆம் இலக்கம் உறுதி மூலம் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்காக ஆதன ஒருங்கணைப்பிற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும் வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதன உரிமையாளரது பெயரிற்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்தவும் ஆதன ஒருங்கிணைப்புச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புத் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர், நகராட்சிமன்றம் சாவகச்சேரி.**

(சி-3459)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில்
## வயலுக்குச் செல்லும் வீதி சீரின்மையால்
# விவசாயிகள் பாதிப்பு

**(முல்லைத்தீவு)**

**முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கமநலசேவைநிலையப் பிரிவிற்குட்பட்ட, காதலியார் சம்மளம்குளம் பகுதியிலுள்ள வயல்நிலங்களுக்குச்செல்லும் 3கிலோமீற்றர் தூரமான குருவிச்சை ஆற்றுப்பால வீதியானது சீரின்றி காணப்படுவதாக, இப்பகுதியில் 300 ஏக்கர்வரையிலான விவசாயநிலங்களில் நெற்செய்கைமேற்கொள்ளும் விவசாயிகள் விவசாயத்திற்கான உள்ளீடுகளை எடுத்துச்செல்வதிலும், அறுவடைக்காலத்தில் அறுவடையை எடுத்துச்செல்வதிலும் பலத்த இடர்பாடுகளுக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**



இந்நிலையில் அப்பகுதி விவசாயிகளின் அழைப்பை யேற்று வன்னி மாவட்ட பாரா ளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் நேற்றைய தினம் குறித்த பகுதிக்கு நேர டியா கச்சென்று நிலை மைகளைப் பார்வை யிட்டார்.

அத்தோடு குறித்த பகு தியில் அமைந்துள்ள குரு விச்சை ஆற்றுப்பாலமும் கடந்த காலத் தில் மிக மோசமாக சேதமடைந் திருந்த நிலையில் பாரா ளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வடக்கு மாகாணசபை உறுப் பினராக இருந்த காலத்தில் அவரு ஸ்ரீடைய முயற்சியால் அந்தப் பாலம் புதிதாக அமைக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில் அப்பாலத் தினைப் புதிதாக அமைத்துத் தந் ததைப்போல, அதனோடு இணைந்த 3கிலோமீற்றர் தூரமான வீதியையும் சீர மைத்துத்தருமாறு விவ சாயிகளால் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தது.

குறித்த வீதிச் சீர மைப்புத் தொடர்பில் எழுத்து மூலமான கோரிக்கை யினைத் தம்மிடம் கைய ளிக்குமாறும், தாம் இவ் வீதிச் சீரமைப்புத் தொடர் பில் கவனம் செலுத் துவதாகவும் ரவிகரன் எம் பியினால் இதன் போது தெரி விக்கப்பட் டது.

மேலும் இந்த கள விஜயத்தின் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவி கரனுடன் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் இராசரத்தினம் கிரிதரனும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)

## இளையோர் சுகநலக் கண்காட்சியும்
# விழிப்புணர்வு நடைபவனியும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையுடன் யாழ் தாதிய பயிற் சிக் கல்லூரி மாணவர்கள் மற் றும் தாய்மார் கழகங்கள் இணைந்து நடத்தும் இளை யோர் சுகநலக் கண்காட்சி மற் றும் விழிப்புணர்வு நடை பவனி என இரு நிகழ்வுகள் இன்று தெல்லிப்பழையில் நடைபெற வுள்ளது.

போதைப் பொருள், வீதி விபத்துக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள் ளல், போசாக்குப் பற்றாக்குறை, பாடசாலைச் சுகாதரம், தாய் சேய் நலம், சுற்றுச்சூழலில் சுகாதார மேம்பாடு, உளநல மேம்பாடு மற்றும் ஆன்மிக வாழ்க்கை என சமூகம் சார்ந்த விழிப் புணர்வுக்கான நடைபவனியும், கண்காட்சியும் நடைபெற வுள்ளது.

மேற்படி நிகழ்வு தொடர்பான நடைபவனியைக் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் காலை 7.30 மணியளவில் யூனியன் கல்லூரியிலிருந்து தொடக்கிவைக்கின்றார்.

அத்துடன் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையில் இன்று காலை முதல் மாலை வரை நடை பெறும் மேற்படி கண்காட்சியில் இளையோரை வெளிப்படுத்தக் கூடிய, அவர்களின் நல் வாழ்வை மேம்படுத்தக்கூடிய பல விடயங்கள் காட்சிப்படுத் தப்பட இருக்கின்றன. எனவே பெற்றோர்கள் தங்கள் குழந் தைகளுடனும் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுடனும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 250 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 500 | 350 | 400 |
| தக்காளி | 120 | 200 | 150 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 200 | 250 |
| கோவா | 300 | 400 | 400 | 250 | 350 |
| கரட் | 400 | 480 | 500 | 350 | 450 |
| பூசணி | 100 | 140 | 120 | 100 | 120 |
| புடோல் | 100 | 100 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 200-350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 450 | 600 | 600 | 450 | 400 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 400 | 250 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 230 | 300 |
| பீற்றூட் | 180 | 150 | 250 | 120 | 200 |
| கறிமிளகாய் | 600 | 650 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 400 | 300 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 420 | 700 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | -- | 180 |
| கீரை – 1 பிடி | 80 | 40-120 | 80-100 | 60 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 120 | 80-130 | 140-180 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 300 | 400 |
| முள்ளங்கி | 150 | 100 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | -- | 150 |

## அல்லைப்பிட்டியில் புதர்களுக்குத் தீ
# போக்குவரத்து பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி அலு மினிய தொழிற்சாலைப் பகுதிக் காணிகளில் காணப் பட்ட புதர்களுக்கு விசமிகள் தீவைத்தமையால் வீதியால் மக்கள் செல்லமுடியாத நிலை உருவானது.

பற்றி எரிந்த புதர்களால் ஏற்பட்ட புகை மூட்டத்தால் ஊர்காவற்றுறை - யாழ்ப் பாணம் வீதியின் போக்கு வரத்து பெரிதும் பாதிக்கப் பட்டதுடன், வீதியால் போக்குவரத்தில் ஈடுபட்ட மக்கள் சுவாசிக்க முடியாத நிலையும் ஏற்பட்டது.

மேலும் குறித்த புகை மூட்டத்தால் மோட்டார் சைக் கிளில் சென்ற சிலர் விபத் துக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக பிரதேச சபை தவிசாளருக்கு அறி யப்படுத்தியதை அடுத்து, யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் வர வழைக்கப்பட்டு தீயைக் கட் டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு மாவட்ட மேலதிக அரச அதிபர் கை.சிவகரன் கள விஜயம் மேற்கொண்டு நிலைமை களை அவதானித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக பல்கலைக்கழக தடகள போட்டியில் யாழ்.பல்கலையின் வீராங்கனைக்கு தகுதி



உலக பல்கலைக்கழக மெய்வல்லுநர் போட்டிக்கு இலங்கையிலிருந்து யாழ்.பல்கலைக்கழக மாணவியான நேசராசா டக்சிதா கோலூன்றிப்பாய்தல் போட்டியில் பங்குபற்றவுள்ளார்.

உலக பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஜேர்மனியில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். பல்கலைக்கழகத்தி லிருந்து நேசராசா டக்சிதா எனும் மாணவி கோலூன்றிப் பாய்தல் போட்டியில் பங்குபற்றவுள்ளார். இவர் யாழ்.பல்கலைக் கழகத்தில் விளையாட்டு விஞ்ஞான அலகில் 3 ஆம் வருட மாணவியாக கல்வி கற்று வருகின்றார். இலங்கையில் நடைபெற்ற பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான போட்டியில் பங்குபற்றி உலக பல்கலைக் கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தகுதி காண் தகைமையை பூர்த்தி செய்தமையால் இலங்கை பல்கலைக் கழக சங்கத் தினரால் தெரிவு செய்யப்பட்டு யாழ்.பல் கலைக் கழகத்திலிருந்து கோலூன்றி பாய்தல் போட்டியில் கலந்து கொள்ள உள்ளார்.

அத்துடன் குறித்த உலக பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டிக்கு பல்கலைக் கழகங்களைப் பிரதிநிதித்துவம் செய்து இலங்கையில் இருந்து 11 வீரர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-90)



17 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியின் 35 பேர் கொண்ட குழாமில் இளவாலை, யா/புனித ஹென்றியரசர் கல்லூரியின் உதைபந்தாட்ட அணி வீரன் தெ.தனுசியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடிப்படகு தீக்கிரை!



(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர் ஒருவருடைய பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன் பிடி படகு மற்றும்.வெளி இணைப்பு இயந்திரம் ஆகி யவை கடலில் வைத்து எரி யூட்டப்பட்ட நிலையில் அடம்பன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விடத்தல் தீவு கடற்கரையில் கடந்த சில தினங்களாக நிறுத்தி வைக்கப்பட்ட மீன்பிடி படகின் வெளி இணைப்பு இயந்திரம் இனம் தெரியாத நபர்களினால் இரவு நேரங்களில் கடலில் தூக்கி வீசப்பட்டு வந்த நிலையில்.குறித்த வெளி இணைப்பு இயந்திரங்களை மீட்டு மீனவர்கள் கடற்தொழிலுக்குச் சென்று வந்துள்ளனர்.

இந்த நிலையில் விடத்தல் தீவு மேற்கு மீனவ கூட்டுறவு சங்கத்தின் பொருளாளர் கடந்த வெள்ளிக்கிழமை மீன் பிடிக்க கடலுக்குச் சென்று மீண்டும் படகு விடத்தல்தீவு கடற்கரையில் கட்டப்பட்டது.குறித்த படகில் பெறுமதியான வெளி இணைப்பு இயந்திரமும் பொருத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மறுநாள் சனிக்கிழமை காலை மீண்டும் தொழிலுக்குச் செல்ல குறித்த படகின் உரிமையாளர் கடற்கரைக்குச் சென்ற போது படகை காணவில்லை.

இதன் போது குறித்த படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவை சற்று தொலைவில் எரியூட்டப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.குறித்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் அடம்பன் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பின்னர் தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று எரியூட்டப்பட்ட படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவற்றை பார்வையிட்டதோடு.விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.(8-285)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3330

சுஜேனி




மிதுளா




மாதுரி




கதிர்




வதன்





கதிர்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்





## உணவுக்காக காத்திருந்தவர்களை கொன்று குவித்த இஸ்ரேல்!

(காசா)

உணவுக்காகக் காத்திருப்பவர்கள் மீது துப்பாக்கிச் சூடு, பீரங்கி மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தி இஸ்ரேல் படுகொலைகளை செய்து வருகிறது.

நேற்று முன்தினம் மட்டும் ஒரே நாளில் காசா மீதான இஸ்ரேலிய தாக்குதலில் 104 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் 37 பேர் ராஃபாவில் உள்ள உணவு விநியோக மையத்தில் உணவுக்காக காத்திருந்தபோது கொல்லப்பட்டனர்.

இதன்மூலம் காசா போரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 58,765 ஐ எட்டியுள்ளது. 1,40,485 பேர் காயமடைந்தனர்.

மற்ற அனைத்து வழிகளும் மூடப்பட்டு, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் ஆதரவுடன் நடத்தப்படும் காசா மனிதாபிமான அறக்கட்டளை மூலம் உணவு விநியோகம் செய்யப்படுகிறது.

ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் பட்டினியின் விளிம்பில் இருப்பதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது. அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர்.

சில நாட்களுக்கு ஒரு முறை ஏதாவது சாப்பிடுகிறார்கள். சுத்தமான தண்ணீர் இல்லாமல் தொற்று நோய்கள் பரவி வேகமாக பரவி வருகின்றன.

இதற்கிடையே நேற்று முன்தினம் இஸ்ரேலிய தாக்குதல்களுக்கு மத்தியில், காசாவில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தங்கள் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளை எழுதினர். அக்டோபர் 2023 இற்குப் பிறகு காசாவில் தேர்வுகள் நடத்தப்பட்டது இதுவே முதல் முறையாகும். (நி)

## திடீரென நடுவானில் தீப்பிடித்த விமானம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் இருந்து அட்லாண்டா நோக்கிப் பயணித்த விமானத்தின் இயந்திரத்தில், திடீரென தீப்பற்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போயிங் 767-400 ரக பயணிகள் விமானத்தின் இயந்திரத்திலேயே நேற்று முன்தினம் தீப்பற்றியுள்ளது.


இதன்காரணமாக குறித்த விமானம் மீண்டும் லொஸ்ஏஞ்சல்ஸில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விமானம் தரையிறங்கியதும் தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

சம்பவத்தில் விமானத்தில் பயணித்த யாருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.(நி)

## பிரம்மபுத்திராவில் அணை கட்டும் பணியை ஆரம்பித்தது சீனா



(பீஜிங்)

சீனா தன் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே, 14 லட்சம் கோடி ரூபாயில் உலகின் மிகப்பெரிய அணை கட்டும் பணியை அதிகாரப்பூர்வமாக துவங்கியது.

இந்தியாவின் நாடான சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தில், பிரம்மபுத்திரா நதியில் பிரமாண்டமான அணையை சீனா கட்ட உள்ளது.

திபெத் கைலாய மலையில் உற்பத்தியாகும் பிரம்மபுத்திரா நதி, இந்தியாவின் அருணாச்சல், அசாம் வழியாக வங்கதேசத்திற்குள் நுழைந்து வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது.


திபெத்தில் இந்த நதி யார்லுங் சாங்போ என, அழைக்கப்படுகிறது. திபெத் பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சீனா, நீர்மின் திட்டத்திற்காக பிரம்மபுத்திராவில் உலகின் மிகப்பெரிய அணையை கட்ட திட்டமிட்டது.

நம் நாட்டு எல்லையிலிருந்து 50 கி.மீ., தொலைவில், திபெத்தில் உள்ள மெடோங் மாவட்டத்தில் பிரம்மபுத்திரா நதியின் மீது இந்த அணை அமைய உள்ளது. அதற்கான பணிகள் துவங்கியதாக சீன பிரதமர் லி குயாங் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இந்த அணை திட்டத்தை இந்தியா தொடர்ந்து எதிர்த்து வருகிறது. "இதை நீர் வெடிகுண்டாக சீனா பயன்படுத்தக் கூடும். இதனால் அருணாச்சலுக்கு பேரழிவு ஏற்படும்" என, அம்மாநில முதல்வர் பெமா காண்டு சமீபத்தில் தெரிவித்தார்.(நி)

## பேருந்து கவிழ்ந்து ஈரானில் பயங்கர விபத்து!

- 21 பேர் உயிரிழப்பு
- 34 பேர் படுகாயம்



(டெஹ்ரான்)

ஈரானின் ஷிராஸ் நகரில் நடந்த வீதி விபத்தில் 21 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 34 பேர் காயமடைந்தனர்.

ஷிராஸ், ஃபார்ஸ் மாகாணத்தின் தலைநகரம் ஆகும். இந்த விபத்து நேற்று முன்தினம் காலை 11:05 மணியளவில் நிகழ்ந்துள்ளது. 55 பேரை ஏற்றிச்சென்ற பேருந்து நெடுஞ்சாலையில் திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலில் சிக்கியது! பயணிகள் படகு!

- 35 பேர் கடலில் மூழ்கி உயிரிழப்பு
- 11 பேர் உயிருடன் மீட்பு
- பலர் மாயம்
- வியட்நாமில் சோகம்

**(ஹனோய்)**

**வியட்நாமில் சுற்றுலாப்பயணிகள் படகு புயலில் சிக்கி விபத்துக்குள்ளானதில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.**



53 பேருடன் பயணித்துக்கொண்டிருந்த வொன்டர் சீ என்ற படகே அனர்த்தத்தை சந்தித்துள்ளது. சுற்றுலா பயணிகள் மத்தியில் பிரபலமான ஹாலோங் குடாவிற்கு வொன்டர் சீ பயணித்துக் கொண்டிருந்தவேளை புயல் காரணமாக கடலில் மூழ்கியுள்ளது.

11 பேரை உயிருடன் மீட்டுள்ளதாகவும் மிகுதிப் பேருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடும் காற்று காரணமாக படகு தலைகீழாக கவிழ்ந்தது என வியட்நாமின் செய்தித்தாள்கள் குறிப்பிட்டுள்ளன.

உயிரிழந்தவர்களில் அனேகமானவர்கள் வியட்நாமியர்கள்.

தலைகீழாக கவிழ்ந்த படகிற்குள் சிக்குண்டிருந்த 10 வயது சிறுவன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளான்.

நான் ஆழமாக மூச்சை இழுத்துவிட்டேன், கடலில் நீந்தினேன் காப்பாற்றுமாறு அலறினேன் அவ்வேளை என்னை படகொன்று காப்பாற்றியது என அந்த சிறுவன் தெரிவித்துள்ளான்.

மீட்கப்பட்ட உடல்களில் 8 சிறுவர்களுடையவை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## கருவிலே முன்பதிவு பிறந்தவுடன் விற்பனை

### இந்தோனேசிய பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

(ஜகர்த்தா)

சிங்கப்பூரை சேர்ந்தவர்களிற்கு 25 கைக்குழந்தைகளை விற்பனை செய்த சர்வதேச கும்பலொன்றை சேர்ந்த 13 பேரை இந்தோனேசிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

இந்தோனேசிய நகரங்களான பொன்டியானாக் மற்றும் டாங்கெராங்கில் இந்த வாரம் குழந்தைகளை கடத்தும் கும்பலுடன் தொடர்புடைய 13 பேரை அதிகாரிகள் கைது செய்தனர். மேலும் கடத்தப்படவிருந்த ஆறு குழந்தைகளை மீட்டனர். மீட்கப்பட்ட குழந்தைகள் அனைவரும் ஒரு வயதிற்கும் குறைவானவர்கள்.

குழந்தையை வளர்க்க விரும்பாத பெற்றோர்கள் அல்லது கர்ப்பிணித் தாய்மார்களை குறிவைப்பதே இந்தக் கும்பலின் செயற்பாடாகக் கூறப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் பேஸ்புக் வழியாகத் தொடர்பு கொள்ளத் தொடங்குவதாக பொலிஸ்துறை தெரிவித்துள்ளது.

இந்தக் குழந்தைகள் ஒவ்வொன்றும் 11 மில்லியன் இந்தோனேசிய ரூபாய் முதல் 16 மில்லியன் இந்தோனேசிய ரூபாய் வரை விற்கப்பட்டதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கைது செய்யப்பட்ட சிலரின் கூற்றுப்படி கும்பல் குறைந்தது 12 ஆண் மற்றும் 13 பெண் குழந்தைகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்றுள்ளது.

அவர்களில் பெரும்பாலோர் இந்தோனேசிய மாகாணமான மேற்கு ஜாவாவில் உள்ள பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் இருந்து வந்தவர்கள். (நி)

## சவுதி அரேபியாவின் 'தூங்கும் இளவரசர்' காலமானார்

(ஜெர்த்தா)



சவுதி அரேபியாவின் இளவரசர் அல் வாலீத் பின் காலித் பின் தலால் அல் சவுத் தனது 36ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

தூங்கும் இளவரசர் என அழைக்கப்படும் இவர், 20 ஆண்டுகளாக கோமாவில் இருந்தார். 2005 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் லண்டன் நகரில் ஏற்பட்ட சிற்றூந்து விபத்தில் சிக்கி, அவர் கோமாவிற்கு சென்றார்.

இதன்படி, கடந்த 20 ஆண்டுகளாக கோமாவில் இருந்த இளவரசர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவருடைய மறைவை, அல் வாலீத்தின் தந்தையான இளவரசர் காலித் பின் தலால் அல் சவுத் உறுதி செய்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 அடி பள்ளத்தில் வீழ்ந்த வான்



(கொழும்பு)

தலவாக்கலையில் உள்ள ஒரு தேவாலயத்திற்கு வந்த வான் ஒன்று பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு பிரதான வீதியில் விழுந்துள்ளது.

தேவாலயத்திற்கு ஒரு குழுவை ஏற்றிச் சென்ற வானே ஹற்றன்-நுவரெலியா பிரதான வீதியில் விழுந்ததால் விபத்து ஏற்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

ஹற்றன்-நுவரெலியா பிரதான வீதிக்கு மேலே அமைந்துள்ள தேவாலயத்திற்கு வந்த வான், ஒரு திருப்பத்தை எடுக்க பின்னோக்கிச் சென்றபோது, கட்டுப்பாட்டை இழந்து சுமார் 15 அடி கீழே பிரதான வீதியில் விழுந்தது.

இந்த விபத்தில் சாரதி மற்றும் மற்றொரு நபருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது.

விபத்தில் வான் பலத்த சேதமடைந்ததாகவும் விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 12 இல் செவ்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: MSc,Civil Engineer (UK)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண் (uk)
தொ.இ: B/15822

பிறப்பு:1983 இந்து
நட்சத்திரம்: 11 இல் சூரி செவ்
உயரம்:5' 4"
தகைமை/தொழில்: A/L, Supervisor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15823

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2 இல் செவ்
கி.பா: 30
உயரம்:5' 10"
தகைமை/தொழில்:A/L, Pvt(work)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15824

பிறப்பு: 1990 RC
உயரம்:5' 6"
தகைமை/தொழில்: A/L, Super Market (சுவிஸ்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15825

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்:5' 9"
தகைமை/தொழில்: NCAT, MA
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15826

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 17 1/2
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:O/L, Pvt work
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15810

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 33
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்:HND(IT),PVT Work
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15813

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1 இல் செவ்
கி.பா: 78
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15814

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1 இல் செவ்
கி.பா: 09
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: AAT, uk
எதிர்பார்ப்பு: வெளிநாடு (PR உள்ளவர்கள்)
தொ.இ: G/15815

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 86
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்
தொ.இ: G/15818

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 417

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# புவி இயல் விஞ்ஞானம்

ஜேர்மனியில் தெற்குப் பகுதியில் ஒரு கிராமம். "வில்சி பர்க்" என்று பெயர். ரொம்ப சின்ன ஊர் தான். மொத்த மக்கள் தொகையே 3,300 தான். அந்த ஊரிலே இருக்கிற மக்களிலே பலபேருக்கு புற்றுநோய் வந்து கஷ்டப்பட்டார்களாம்.

புற்றுநோய் எல்லா ஊரிலேயும் தான் வருகிறது. இருந்தாலும் அந்த ஊரிலே அந்த நோய் வந்து இறந்து போறவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. அதற்கு என்ன காரணமாக இருக்கும்?

விஞ்ஞானிகளுக்கு இது ஒரு பெரிய மர்மமாக இருந்தது.

ஒன்றும் புரியவில்லை!

1929 ஆம் வருடத்திலேயே இதைப் பற்றி மூன்று விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்தார்களாம்.

1920 ஆம் வருடத்திலேயே இதைப் பற்றி மூன்று விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்தார்களாம்.

1920 ஆம் வருடத்திலேயும் சில விஞ்ஞானிகள் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து சில முடிவுகளை சொல்லி இருக்கிறார்களாம்!

அந்த கிராமத்திலே மட்டும் புற்றுநோய் மரணங்கள் அதிகமாக இருப்பதக்குக் காரணம் பூமி சம்பந்தப்பட்ட கோளாறுகளாத்தான் இருக்க வேண்டும் என்பது அவர்களுடைய முடிவு.

பூமிக்கு அடியிலே இருந்து கண்ணுக்குப் புலப்படாத தீய ஒளிக் கதிர்வீச்சுதான் புற்று நோயை ஏற்படுத்துகிறது என்று "வின்சர் மெல்சர்" என்ற ஆராய்ச்சி நிறுவனம் சொல்லியிருந்தது.

உலகப்புகழ் பெற்ற புவி இயல் விஞ்ஞானிகள் சிலபேர் அந்த ஊருக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

பூமிக்கு அடியிலே இருக்கிற நீரோட்டப் பாதைகளையெல்லாம் சோதனை செய்தார்களாம். பூமிக்கு அடியிலே சுமார் 50 மீற்றர் ஆழத்திலே அந்த நீரோட்டப் பாதைகள் அமைந்து இருந்தது! உடனே அவர்கள் ஒரு வேலை செய்தார்கள்.

அந்த கிராமத்து வரைபடத்திலே அந்த ஊரிலே இருக்கிற வீடுகளை குறித்தார்கள். அப்புறம் பூமிக்கு அடியிலே இருக்கிற நீர்ப்பாதைகளை கண்டு பிடித்தார்கள். அந்த கிராமத்து மக்கள் குழாய் மூலமாக தண்ணீர் எடுக்கிற இடத்தையும் குறித்தார்கள். அந்த குழாய் மூலமாக வருகின்ற தண்ணீரைத்தான் அவர்கள் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

பூமிக்கு அடியிலே குடிநீர்க் குழாய் போகிற பாதைக்கு மேலே வீடுகள் அமைந்திருக்கிறதையும் பார்த்தார்கள்.

புற்றுநோய் கண்டு மரணமடைந்த நோயாளிகள் படுத்திருந்த படுக்கைகளுக்கு நேர் கீழே பூமிக்கு அடியிலே தீய விளைவைத் தரக்கூடிய கதிரியக்கம் இருக்கிறதை கண்டு பிடித்தார்கள்.

இந்த சோதனை பற்றிய விபரத்தையெல்லாம் ஒரு புத்தகமாக எழுதி 1932 ஆம் வருடத்திலேயே வெளியிட்டார்கள்.

அதற்கு அப்புறம்தான், மருத்துவ விஞ்ஞானத்துறையிலே ஒரு புதிய ஆராய்ச்சி ஆரம்பமாகியது.

அதுக்கு "ஜியோ பாத்தாலஜி" என்று பெயர் வைத்தார்கள்.

பூமிக்கு அடியிலே உள்ள தீய கதிரியக்கம் சில நோய்களை உண்டாக்குகிறது என்பதைப் பற்றிய ஆராய்ச்சி அது.

பூமிக்கு அடியிலே இருக்கிற நீர்க்குழாய்கள், நீர்ப் பாதைகள், நீரோட்டங்கள், இதிலேயெல்லாம் தீய கதிரியக்கங்களின் தாக்கம் இருக்கிறது.

இதற்கும் பூமி மேலே அதற்கு நேராக இருக்கக்கூடிய மனிதர்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுகிறது. அதனாலே அவர்களுடைய ஆரோக்கியம் கெட்டுப் போகிறது. அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற்றம் ஏற்படுவதில்லை.

இதுதான் இந்த "ஜியோபாத்தாலஜி" என்ற மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சியின் அடிப்படை. இப்பவும் இது பற்றிய ஆராய்ச்சி தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கிறது. இதற்கென்று சில விசேடமான கருவியெல்லாம் தயார் செய்திருக்கிறார்கள். பூமிக்கு அடியிலே இருக்கிற காந்த சக்தியின் ஏற்ற இறக்கங்களை அந்தக்கருவி அளந்து சொல்லுகிறது.

வேறுவிதமாக சில சோதனைகளை எல்லாம் செய்து பார்த்தார்கள். சில நோயாளிகள் படுத்திருந்த கட்டில்களை இடம் மாற்றி போட்டார்கள். பூமிக்கு அடியிலே தீயகதிரியக்கம், காந்த அதிர்வு அலைகள், மின்சார ஓட்டம் இந்த மூன்றும் ஒன்றுடன் ஒன்று மோதாத இடங்களிலே நோயாளிகளின் கட்டில்களை போட்டார்கள். அதன்பின் பார்த்தீர்கள் என்றால் அவர்கள் எல்லோரும் சீக்கிரம் குணம் அடைந்தார்களாம்.

புவி இயல் விஞ்ஞானிகள் மருத்துவ விஞ்ஞானிகளுக்கு இதை நிரூபித்துக் காட்டி இருக்கிறார்கள்.

எங்களுடைய ஊரிலே வீடு கட்டுவதற்கு மனையடி சாஸ்திரமெல்லாம் பார்க்கிறார்களே, அதற்கெல்லாம் ஏதாவது அடிப்படை காரணம் இருக்கிறதா என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார் ஒரு பெரியவர். எனக்கு வேண்டிய ஒருவர் ஜியோபாத்தாலஜி மனையடி சாஸ்திரம் எல்லாம் கவனித்து ரொம்ப நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து ஒரு இடத்தை தெரிவு செய்தார். இதுதான் வீடு கட்டுவதற்கு ஏதுவான இடம் என்றார்.

ஆனால் அவரால் வீடு கட்ட முடியவில்லையாம். "ஏன்?" என்று கேட்டேன். "அந்த இடம் எனக்கு சொந்தமான இடம் இல்லை. அது வேறு ஒருவருக்கு சொந்தம். அதனாலே அவர் ஏற்கனவே அங்கே அத்திபாரம் போட்டுவிட்டார் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கொடி எலுமிச்சைப்பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சிட்ரஸ் பழங்களில் ஒன்றான கொடி எலுமிச்சை அதன் சுவைக் காகவும் அற்புதமான மருத்துவ குணங் களுக்காகவும் தனித்து விளங்குகிறது. கொடி எலுமிச்சைப் பழத்தின் ஆரோக்கிய நன்மைகள் பல உள்ளன. இது விற்றமின் C மற்றும் பிற அத்தியாவசிய உட்டச் சத்துக்களின் ஆதாரமாக உள்ளது.

இப் பழமானது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் மேம் படுத்தவும் உடலில் உள்ள நச் சுக்களை நீக்கவும் உதவுகிறது. மேலும் இப் பழங்களில் சுண்ணாம் புச் சத்து அதிகம் காணப்படுகிறது. வறட்டு இருமல் உள்ளவர்கள் இப் பழச்சாற்றுடன் சம அளவு தேன் கல ந்து அருந்தி வந்தால் இருமல் குண மாகும். குளிர் காலங்களில் இள நீரில் கலந்து குடித்தால் உஷ்ணத் தால் ஏற்படும் வயிற்றுவலி குண மாகும். குளிர் காலங்களில் குளித் தவுடன் ஒரு சொட்டு கொடி எலுமிச் சம் பழச்சாற்றை நல்லெண்ணை யுடன் கலந்து குழைத்து கழுத்து பகுதிகளில் பூசி வர தோல் பள பளப்பாக இருப்பதுடன் தோலில் வரட்டுத்தன்மை இருக்காது.

இப் பழத்தில் பாலிபீனால்கள், டெர்பின்கள் மற்றும் டானீன்கள் உள்ளிட்ட பல்வேறு தாவரவேதியற் பொருட்கள் உள்ளன. இப் பழத்தில் காணப்படும் கரையக் கூடிய நார்ச சத்துக்கள் உடல் எடைக் குறைப் பிற்கு உதவுகின்றன. மற்றும் இரு தய நோய்கள் இரத்தச்சோகை, சிறுநீரகக் கற்கள், செரிமானப் பிரச் சினைகளின் அபாயத்தைக் குறைக் கின்றது.

கொடி எலுமிச்சைப் யூஸைத் தின மும் குடித்து வந்தால் உடல் எடை குறையும். ஏனெனில் இதில் உள்ள அமிலமானது. உடலில் உள்ள கொழுப் புக்களை கரைத்து உடலுக்கு ஒரு நல்ல வடிவத்தைக் கொடுக்கும். செரிமானப் பிரச்சினைகள், வாயுப்பிரச்சினைகள் போன்றவை உள்ளவர்கள் கொடி எலுமிச்சைச் சாற்றை சூடான நீரில் கலந்து குடித்து வர நன்மைகள் தரும். சீனி சேர்க்காமல் கொடி எலுமிச்சை யூசை அருந்தினால் கல்லீரல் கொழுப்பு (Fatty liver) வயதாகும் போது இது ஏற்படலாம் தான் ஆனாலும் இப்போது எல்லோரும் பொதுவாக Fatty Liver இனால் பாதிக்கப்படுகின்றார்கள். அதற்கு சீனி சேர்க்காமல் ஒரு பழத்தின் சாற்றை



ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து குடித் தால் கல்லீரல் கொழுப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம். சிறந்த பலனைக் கொடுக் கும். கொலஸ்ரோலைக் குறைக்கும் ஆற்றலும் உண்டு. இது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுமுள்ளது. பித்தப் பையில் கொழுப்புக் கட்டிகள் , கொலஸ் ரோலினால் பித்தப்பையில் கற்கள் உருவாகுவதையும் இக் கொடி எலு மிச்சை யூஸ் தருகிறது. கொடித்தோடம் சாற்றிலிருந்து Phytonutrients ஆனது இன்சுலினின் அளவைக் குறைக் கும். சர்க்கரை அளவைக் குறைப் பதை விட இன்சுலின் அளவைக் குறைப்பது இப்போது பெரிய விடயமாக கருதப்படுகிறது. இதனால் மறை முகமாக உடல் எடை குறைகிறது. புற்றுநோயை உருவாக்கும் Free radicals எனும் ஒரு விதமான புற்றுநோய்க்கலங்களை உருவாக்கி பெருக உதவுகிறது. கொடி எலுமிச்சைச் சாற்றிர்க்கு இதைத் தடுக்கும் ஆற்றல் உண்டு. சிறுநீரகக் கற்கள் உருவாக ஒக்ஸலேட்டுக்கள் முக்கிய காரணமா கின்றன. கொடித் தோடைச்சாற்றில் காணப்படும் Citrates ஆனது ஒரு ஒக்ஸலேட்டுக்கு எதிரானது. எனவே கொடி எலுமிச்சைச் சாற்றை நீர் கலந்து தினம் அருந்தி வர சிறுநீரகக் கற்கள் கரையும் அல்லது உருவாக விடாமல் தடுக்கும். கொடி எலுமிச்சைச் சாற்றில் காணப்படும் அதிகளவு விற்றமின் C இனால் உடல் எதிர்ப்பு சக்தி அதிக ரிக்கிறது. அத்துடன் இரத்த நாளங் களில் கொழுப்பு படியவிடாமல் தடுக் கின்றது. இதனால் ரத்த நாளங்கள் ஆரோக்கியமாக காணப்படுகின்றது.

இதனால் இரத்த ஓட்டம் சீராகிறது. இதனால் கால்புண்கள், வெரிக்கோஸ் பிரச்சினைகள் உள்ளவர்கள் கூட இந்த யூஸை அருந்தலாம். தினமும் எலு மிச்சை சாறு குடிப்பது உடலுக்கு ஆரோக் கியமானது. இக் கொடி எலுமிச்சையிலும் அதிகளவு சிற்றிக்கமிலங்கள் காணப் படுகின்றது. இது இரப்பையில் சுரக்கும் அமிலத்தின் உற்பத்தியைக் கட்டுப் படுத்தும். இதனால் கூடுதலாக சாப் பிட்டால் சாப்பிட்டவுடன் ஒரு கொடி எலு மிச்சை யூஸ் அருந்தினால் இலகுவில் சமிபாடு அடையும். அத்துடன் குட லிலுள்ள நல்ல பக்றீரியாக்கள் வளர்ச்சி அடையும். இதனால் சமிபாட்டு பிரச்சி னைகள் ஏற்படாது. அத்துடன் இதன் யூஸானது சிறந்த இயற்கையான மல மிளக்கியாகும். தினமும் காலையில் இவ் யூஸை அருந்தினால் இயற்கையாக மலங்கழியும். கல்லீரலை ஆரோக் கியமாக அதாவது கல்லீரலிலிருக்கும் நொதியங்களை சீராகச் சுரக்கச் செய்து கல்லீரலின் தொழிலையும் அனுசேபத் தையும் சீராகப் பேணி கழிவுகளை சீராகப் பேண உதவுகிறது. எனவே தினமும் ஒரு டம்ளர் எலுமிச்சை யூஸ் அருந்துவது சிறந்ததாகும். கொடி எலு மிச்சையை காயகற்ப மூலி என குறிப் பிட்டுள்ளார்கள். அத்துடன் இதற்கு Anti- aging தன்மையும் உள்ளது. அதாவது இதில் உள்ள Anti-Oxidant தன்மையாலும் தோலில் சுருக்கங்கள் ஏற்படுவது தடுக்கப்பட்டு தோல் பளபளப்பாக காணப்படும். கண்பார்வை கூர்மை அடைய இப்படிச் சாற்றில் இருக்கும் உயிர்ச்சத்து சி , அன்ரி ஒக்ஸிடன்ற் மற்றும் B1, B6 சத்துக்கள் உதவுகிறது. அத்துடன் கற்றக்ற் கண்ணில் ஏற்படுவதைத் தடுக்கும். அடிக்கடி உடல் உழைப்பு செய்பவர்கள் நீரிற்குப் பதிலாக எலு மிச்சை யூஸ் அருந்தினால் நீர்ச் சத் துடன் சேர்த்து தாதுச் சத்துக்களும் உடலிற்கு கிடைக்கிறது. எனவே தின மும் கொடி எலுமிச்சை யூஸ் அருந் தவும். இதனால் தான் சித்த மருத் துவத்தில் இதனை மருத்துவ மன்னன் எனக் குறிப்பிடுவார்கள்.

## இராசிபலன்

21.07.2025
ஆனி 05, திங்கட்கிழமை
ஏகாதசி முற்பகல் 9.03 மணிவரை

ரோகிணி முன்னிரவு 9.16 மணிவரை
சுப நேரம் 12.01-1.31 மணிவரை
இராகுகாலம் 7.31-9.01 மணிவரை

அமிர்தம்,ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்
சுவாதி,விசாகம்

**வளவன்**

**மேஷம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,காலைப்பொழுதே கலகலப்பான செய்தி வந்து சேரலாம், வாக்கு மே-;மையுண்டு.

**ரிஷபம்**
விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், உள்ளொன்றும் வைத்து புறமொன்று பேசுபவர் களை இனம் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்**
தொழில் ரீதியான பயணங் கள் இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சுபகாரியச் செய்திகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**கடகம்**
பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஊக் கத் தோடும் உற்சாகத் தோடும் பணி புரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,பொது வாழ் வில் கௌரவம் கூடும் நாள்.

**சிம்மம்**
வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப் போடு செயற்படுவீர் கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி**
பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்து இணைவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெற லாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்**
சேமிப்புக்கள் கரையக் கூடிய வாய்ப்புண்டு, மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், தொழில் கூட்டாளிகளுடன் விழிப்புணர்வு அவசியம், ரோக பயமுண்டு.

**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூல முண்டு.

**தனுசு**
வியாபார விரோதம் விலகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்**
ஏட்டிக்குப் போட்டி யாக செயற்பட்ட வர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் வளர்ச் சிக்காக பாடுபடுவீர்கள், சுப செய்திகள் வந்துசேரலாம், புண் ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கும்பம்**
பெற்றோர் மீது பிரியம் கூடும், போசன சுகமுண்டு, உறவினர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், சுப தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**மீனம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பகை விலகி பாசம் கூடும் நாள்.

நீ எதை இழந்தாலும் நம்பிக்கையை இழக்காதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 826





கிளிகளைப் பிடித்துக் கூண்டில் அடைக்கும் இராஜகுமாரிகளுக்கும் விஷத்தைக் கொடுத்து விடுவேன். "நீ இப்போது பேசுவதைக் கேட்டால், உன்னையும் குரூர ராட்சஸி என்று தான் சொல்லுவார்கள்!"

"சொன்னால் சொல்லட்டும்! நான் ராட்சஸியாயிருந்தாலும் இருப்பேன் இராஜ குமாரியாயிருக்க மாட்டேன்."

"இராஜகுமாரிகளின் மீது உனக்கு ஏன் இத்தனை கோபம் பூங்குழலி! பார்க்கப் போனால் அவர்கள் பேரிலும் பரிதாபப்பட வேண்டியதல்லவா? கூண்டில் அடைபட்ட பச்சைக்கிளிகளைப் போலத்தான் அவர்களும் அரண்மனைக்குள் அடைபட்டுக் காலம் கழிக்க வேண்டியிருக்கிறது. தப்பித் தவறி அவர்கள் வெளியில் புறப்பட்டால், எத்தனைக் கட்டுக்காவல்! எத்தனை இரகசியம்? எத்தனை ஜாக்கிரதை! உன்னைப் போல் அவர்கள் படகில் ஏறிக் கொண்டு, தன்னந் தனியாக ஓடையிலும் கடலிலும் போக முடியுமா? இஷ்டப்படி துள்ளித் திரியும் மானைப் போல் காட்டில் சுற்றி அலைய முடியுமா?"

"அவர்களை யார் அடைந்து கிடக்கச் சொல்கிறார்கள்? நான் சொல்லவில்லையே? இஷ்டமிருந்தால் அவர்களும் காட்டில் அலைந்து திரிவதுதானே?"

"இஷ்டம் மட்டும் போதாது அவரவர்களுடைய பிறப்பு வளர்ப்பையும் பொறுத்தது. கிளியைப் போல நீயும் வானத்தில் பறக்க விரும்புகிறாய் அது முடிகிற காரியமா? கடற்கரையில் நீ பிறந்து வளர்ந்தாய். அதனால் இவ்வளவு சுயேட்சையாக இருக்க முடிகிறது. அரண்மனையில் பிறந்து வளர்ந்தவர்களால் அது முடியாது. இன்னும் ஒரு விசித்திரத்தைக் கேள். சில நாட்கள் கூண்டில் அடைபட்டு இராஜகுமாரிகளின் கையினால் உணவு அருந்தி பழக்கப்பட்ட கிளிகள் பிறகு கூண்டைத் திறந்து விட்டாலும் ஓடிப் போகவே விரும்புவதில்லை. சிறிது தூரம் பறந்து வட்டமிட்டு விட்டு, 'கிறீச், கிறீச்' என்று கத்திக் கொண்டு கூண்டுக்குள் திரும்பி வந்து விடும். தஞ்சையிலும் பழையாறையிலும் உள்ள அரண்மனைகளில் இதை நானே நேரில் பார்த்திருக்கிறேன்."

"அவ்விதம் கூண்டில் அடைபடுவதற்கு நான் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டேன். நான் கிளியாயிருந்தால் சொல்கிறேன், என்னைக் கூண்டில் அடைத்து வைத்து அமுதூட்ட வரும் இராஜகுமாரியின் கையை வெடுக்கென்று கடித்து விடுவேன்"

"கூண்டில் அடைபட்ட கிளியாயிருக்கவும் நீ விரும்பமாட்டாய். அரண்மனையில் அடைபட்ட அரசிளங் குமரியாயிருக்கவும் நீ விரும்ப மாட்டாயல்லவா?" "மாட்டவே மாட்டேன் அதைக் காட்டிலும் விஷந் தின்று உயிரை விட்டுவிடுவேன்!" "அதுதான் சரி அப்படியானால் அரண்மனையில் வாழும் இராஜகுமாரனைக் கலியாணம் செய்து கொள்ளவும் நீ ஆசைப்படக் கூடாது?"

கீழ்வானத்தில் கருமேகங்கள் திரண்டு கொண்டிருந்தன. அவ்வப்போது பளீர் பளீர் என்று மின்னல்கள் மின்னிக் கொண்டிருந்தன. இடியின் குமுறல் இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது. சேந்தன் அமுதன் கடைசியாகச் சொன்னதைக் கேட்டதும் பூங்குழலியின் கண்களிலிருந்தும் பளீர் என்று மின்னல் கற்றைகள் புறப்பட்டன. "நான் இராஜ குமாரனைக் கலியாணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாக உனக்கு யார் சொன்னது?"

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## உயிரைக்காப்பாற்றிய வைத்தியம்



(நேற்றைய தொடர்ச்சி)

அம்மா மான் கடைசியாக ஒத்துக் கொண்டது. மான் குட்டி சுந்தருக்கு ஒரே மகிழ்ச்சி. நாளையில் இருந்து நானும் பள்ளிக்குப் போகிறேன் என்று போவோர் வருவோர் எல்லாரிடமும் சொல்லி மகிழ்ந்தது.

மான் குட்டி சுந்தர் பள்ளிக்கு செல்ல ஆரம்பித்து நான் கைந்து மாதங்கள் ஓடி விட்டன. அங்கெல்லாம் மனிதர்களைப் போல் பன்னிரெண்டு வருடங்கள் அடிப் படைக் கல்வி கற்க வேண்டியதில்லை. காரணம், மனிதனை போல் ஐம்பது ஆறு பது ஆண்டுகளுக்கு மேல் வாழ்வது என்பது யானை, மற்றும் ஒரு சில மிருகங்கள் தான்.

மற்றவைகளெல்லாம், பத்து பன்னிரெண்டு வருட வாழ்நாளையே கொண்டிருக்கும்.

அதனால் ஒரு வருட படிப்பு முடிந்தாலே அது பன்னிரெண்டு வகுப்பு முடித்தற்கு சமம். மான் குட்டி சுந்தர் ஒரு வருட படிப்பு முடிந்தவுடன், கரடியாரைச் சந்தித்தது.

கரடியார் மான்குட்டி சுந்தரைப் பாராட்டி நீ நன்றாகப் படித்து முடித்து விட்டாய், நல்ல அறிவாளியாகவும் ஆகி விட்டாய். நீ ஏன் மருத்துவம் படிக்கக் கூடாது என்று கேட்டது. எனக்கும் ஆசைதான், அம்மா ஒத்துக் கொள்ள வேண்டுமே என்று சொன்னது, நீ கவலைப் படாதே. நான் உன் அம்மாவிடம் பேசுகிறேன் என்று கரடியார் சொன்னது.

சொன்னது போலவே மான் குட்டி சுந்தரைத் தன் சொந்த பாதுகாப்பில் காட்டுக்குள் தொலை தூரத்தில் உள்ள மருத்துவர் நரியாரிடம் மருத்துவம் கற்க அனுப்பியது. மான்குட்டி சுந்தரும் அங்கு ஒரு வருடம் நல்ல முறையில் வைத்தியம் கற்று இங்கு வந்து சேர்ந்தது. கரடியார் அதை பாராட்டி இங்குள்ள மிருகங்களுக்கு நீதான் இனி வைத்தியர் என்று சொல்லி ஒரு வைத்திய சாலையையும் நிறுவி கொடு த்தது.

இப்பொழுது மான் குட்டி சுந்தர் வைத்தியர் ஆகி விட்டார். நாமும் அதனை வைத்தியர் சுந்தர் என்று அழைப்போம்.

ஒரு நாள் மான் குட்டி வைத்தியர் சுந்தர் காட்டுக்குள் மூலிகைகளை பறித்துக்கொண்டிருந்த பொழுது ஒரு மிருகத்தின் கூக்குரல் கேட்டது. அந்த இடத்துக்கு விரைந்து சென்று பார்த்தது. அங்கு புலி ஒன்று வரிக்குதிரையைப் பிடித்து கொல்வதற்காக தயாராக இருந்தது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒளியற்ற பொருள் சகத்திலே இல்லை
இருள் என்பது குறைந்த ஒளி.
– பாரதியார்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாணத்தின் கல்வி வீழ்ச்சி யாழ்.பல்கலைக்கழகம் என்ன செய்யும்

வடக்கு மாகாணத்தின் கல்வி வீழ்ச்சி தொடர்பில் குற்றச்சாட்டுக்களை அடுக்குவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்குப் பரிகாரம் தேடுவதே இங்கு முக்கியமானதாகும்.

ஆனால் எங்களின் கல்விக் கட்டமைப்பை பொறுத்தவரை, வீழ்ச்சிக்கான பொறுப்பை உயர்மட்டம் தனக்கு அடுத்த தரப்பிடம் சுமத்திவிட, அடுத்த தரப்பு தனக்கு அடுத்ததாக இருக்கும் தரப்பிடம் தட்டிவிட, ஈற்றில் அதிபர், ஆசிரியர்களின் தலையில் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கடகத்தை வைத்துவிடுவர்.

குற்றத்தைச் சுமந்துநிற்கக்கூடிய ஆசிரியர்களின் சுமைதாங்கிகள் மாணவர்களும் பெற்றோர்களுமே. அவர்கள் அவர்களின் தலையில் இறக்கிவிட, காலம் எனும் மருந்து கல்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியை மறக்க வைத்து, விமோசனம் கொடுக்கும். இதுவே வழமை.

இப்போது நம் கேள்வி; வட. மாகாணத்தின் கல்வி வீழ்ச்சி தொடர்பில் – சா.தர பரீட்சைப் பெறுபேற்றில் வடக்கு மாகாணம் ஒன்பது என்ற கடைசி இடத்தில் இருப்பது குறித்து எங்கள் யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தின் நிலைப்பாடு என்ன என்பதுதான்.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறையானது கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி ஆகிய பட்டங்களை சடையப்ப வள்ளல் போல வழங்கி வருகிறது.

இவ்வாறு ஆண்டு தோறும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும் முதுகல்விமாணிப் பட்டமும் வழங்கப்படுகின்றதாயினும் மாணவர் கல்வி அடைவுமட்டம் தேசிய ரீதியில் கடைசி நிலையில் உள்ளதெனில், அது குறித்து ஆராய வேண்டிய பொறுப்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு உண்டு.

1974 – 2024 என்ற கால வகுப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள் துறை ரீதியாக பொன்விழாவைக் கொண்டாடி மகிழ்ந்துள்ளனர்.

இந்தக் கொண்டாட்டம் புலம்பெயர் நாடுகளிலும் களை கட்டியமை உண்மையில் வரவேற்கப்பட வேண்டும்.

அதேவேளை எங்கள் மாணவர்களின் கல்வி அடைவுமட்டம் வீழ்ச்சி நிலையில் இருப்பது கண்டு நாம் வேதனைப்படாமல் இருக்க முடியாது.

ஆம், யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகம் தனது இனம் சார்ந்து – தனது பிராந்தியம் சார்ந்து கல்வி நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

கல்வி வீழ்ச்சிக்கான காரணத்தைக் கண்டறிவதற்காகக் களமிறங்க வேண்டும்.

ஏழு ஆண்டுக்கொருமுறை இடம்பெறும் ஆசிரியர் இடமாற்றம் வெற்றி தந்ததா? தேவையும் சேவையும் கருதிய இடமாற்றம் என்ற சொற்றொடர் ஆசிரியர்களை இயங்காமல் செய்துவிட்டதா? என்பன பற்றியெல்லாம் ஆராய வேண்டும்.

அதேபோன்று தவணைப் பரீட்சைகளில் அடைவுமட்டத்தை எட்ட முடியாத மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தலுக்கான திட்டமிடலையும் யாழ்.பல்கலைக்கழகத்தின் புத்திஜீவிகள் வகுத்தருள வேண்டும்.

இவற்றை வடக்கின் கல்வி அமைச்சுடன் சேர்ந்து திட்டமிட்டு எங்கள் பிள்ளைகளின் கல்வியை உயர்த்தித் தாருங்கள்.

இதைச் செய்யும்போதுதான் யாழ்.பல்கலைக்கழகத்தின் பொன்விழா அர்த்தமுடையதாக அமையும்.

# அநுர அரசின் புதிய கல்விச் சீர்திருத்தம் பாடசாலைக் கட்டமைப்பை நாசமாக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்

பாடசாலைக் கட்டமைப்பை அழிக்கும் கல்விச் சீர்திருத்தங்களையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இந்த நாசகாரக் கொள்கைகளுக்கு எதிராக நாம் முன் நிற்போம். இதற்காக நாம் அஞ்சப்போவதில்லை. இதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவம் வழங்கும் மக்களுக்காக நாம் முன்நிற்போம். மக்களுக்காக எம்மால் இயன்றவரை போராடி எமது உச்சக்கட்ட கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றுவோம் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அநுராதபுரம் தம்புத்தேகம நகரில் நேற்று முன்தினம (19) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்,

தற்போதைய ஜே.வி.பி அரசாங்கம் விவசாயிகளைப் பாதுகாப்போம், நாட்டைக் கட்டியெழுப்புவோம் என வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும் இன்று நாடு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து பொம்மை அரசாங்கமாகவே இருந்து வருகின்றது.

மக்களின் வாழ்க்கையை அழித்து அவர்களைப் படுகுழியின் பால் இழுத்துச் செல்லும் இந்த மக்கள் விரோதச் செயல்களை நாம் எதிர்ப்போம். மக்களுக்காக என்னால் இயன்றவரை போராடி எனது உச்ச கட்ட கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றுவேன்.

நாட்டில் எங்கும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. 323 கொள்கலன்களை சட்டவிரோதமாக விடுவித்து விட்டு இப்போது நாட்டிற்குப் பொய்யையும் பொய்யான பிரசங்கத்தையும் சொல்லி வருகின்றனர்.

பாடசாலைக் கட்டமைப்பை அழிக்கும் கல்விச் சீர்திருத்தங்களை இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இந்த நாசகாரக் கொள்கைகளுக்கு எதிராக நாம் முன் நிற்போம் என்றார். (ந-7)

## மாவைக் கந்தனின் சப்பற வெள்ளோட்டம்

மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் புதிதாக அமையப்பெற்றுள்ள சப்பறத்தின் வெள்ளோட்டம் இன்று முற்பகல் 11.55 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது 35 ஆண்டுகளின் பின் வெள்ளிக் கொடிக்கம்பத்தில் கொடியேற்றம் கண்டு எதிர்வரும் 24 ஆம் திகதி அமாவாசை தினத்தில் தீர்த்தோற்சவத்தோடு நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறப்பு

(கொத்மலை)

கொத்மலையின் நீரேந்துப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று (20) அதிகாலை முதல் இந்த வான்கதவைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால் செயிண்ட் கிளேயார் மற்றும் டெவோன் நீர்வீழ்ச்சிகளின் அளவும் அதிகரித்துள்ளது.

மேல் கொத்மலையின் நீரேந்துப் பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்வதால், நீர்த்தேக்கத்தின் மீதமுள்ள வான்கதவுகள் தானாகவே திறக்கும் என்பதால் நீர்த்தேக்க அணையின் கீழ் பகுதியிலுள்ள கொத்மலை ஓயாவின் இருபுறமும் வசிப்பவர்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

## குருநாகலில் வாகன விபத்து குழந்தைகள் உட்பட மூவர் பலி

குருநாகல், நாரம்மல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகனவிபத்தில் இரண்டு கைக்குழந்தைகள் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

காரொன்று வீதியை விட்டு விலகி வலது பக்கத்தின் எதிர்த் திசையில் பயணித்த பேருந்து ஒன்றின் மீது மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் திவுல்லாவ பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய காரின் சாரதியும் 09 மாதங்கள் மற்றும் 11 மாதங்களுடைய இரண்டு பெண்குழந்தைகளும் உயிரிழந்துள்ளதுடன் விபத்தில் காயமடைந்த பேருந்து சாரதி, நடத்துனர் மற்றும் பயணி ஒருவரும் தம்பதெனிய வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து நாரம்மல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## போலிக் கடவுச் சீட்டுடன் ஈரானியப் பிரஜை கைது

போலியான பிரித்தானியா கடவுச்சீட்டைப் பயன்படுத்தி ஜப்பான் மற்றும் துருக்கி வழியாக ஐரோப்பாவிற்கு சட்டவிரோதமாகத் தப்பிச் செல்ல முயன்ற ஈரானியப் பிரஜை ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

47 வயதான ஈரானிய நாட்டவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் எல்லைக் கண்காணிப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அவர் ஜப்பானின் நரிட்டாவுக்குப் புறப்படுவதற்காக இரவு 8.00 மணிக்கு விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

அவரது செக்-இன் செயற்பாட்டின் போது அவர் வழங்கிய பிரித்தானியக் கடவுச்சீட்டில் சந்தேகமடைந்த அதிகாரிகள் அவரது அனைத்து ஆவணங்களுடன் எல்லைக் கண்காணிப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் அவரைப் பரிந்துரைத்தனர்.

அந்த நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகளில் கடவுச்சீட்டு மோசடியாக மாற்றப்பட்டிருப்பது தெரியவந்தது. போலி ஆவணத்திற்காக ஈரானில் உள்ள மோசடியாளர் ஒருவருக்கு அவர் 15 ஆயிரம் அமெரிக்க டொலர்களைச் செலுத்தியதும் தெரியவந்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது பணப்பையை மேலும் பரிசோதித்ததில் அவரது உண்மையான ஈரானியக் கடவுச்சீட்டு மற்றும் ஜப்பானின் நரிட்டாவிலிருந்து துருக்கியின் இஸ்தான்புல்லுக்கு செல்லும் விமான டிக்கெட்டை அவர் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

இந்தக் கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து ஈரானிய நாட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலையக் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 18

சொக்கன்

ஏதோ, இந்த மட்டும் புண்ணியவான்கள் அடி, உதை கொடுக்காமல் இலவசமாகச் சரக்கு ஊற்றித்தருகிறார்கள். நாளைக்கு இஸ்ரேல் போய்ச் சேர்ந்த பிறகு உடம்பில் உயிர் இருக்குமோ இருக்காதோ தெரியவில்லை. சாகிற நேரத்தில் இந்தச் சந்தோஷமாவது மிஞ்சட்டுமே என்று மொத்தத்தையும் குடித்து முடித்தார் ஐக்மென்.

அவர் போதையில் கண் செருகிக்கொண்டிருக்கும் போது, மொசாட் ஏஜென்ட்களும் அதேமாதிரியான விமான அதிகாரி யூனிஃபார்ம்களை அணிந்து கொண்டார்கள். விஸ்கி பாட்டிலைத் திறந்து, பன்னீர்போல தாராளமாக மேலே தெளித்துக்கொண்டார்கள்.

இப்போது, அவர்கள் எல்லோர்மீதும் காத்திரமான விஸ்கி வாடை. திருப்தியாகத் தலையாட்டினார் ரஃபி எய்டன்.


சில நிமிடங்கள் கழித்து, அவர்களுடைய கார் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. பாதுகாப்புப் பரிசோதனைக்காக வண்டியை நெருங்கிய காவலர்கள், சட்டென்று மூக்கைப் பொத்திக்கொண்டார்கள், “இதென்ன காரா, இல்லை சாராய வண்டியா?“

“ஸாரி, இன்னிக்குக் கொஞ்சம் ஜாஸ்தி ஊத்திக்கிட்டோம்” என்றார் முன் சீட்டில் உட்கார்ந்திருந்தவர், “உங்க ஊர் விஸ்கி ரொம்ப ஸ்ட்ராங்க், எங்களால தாங்கமுடியலை”

இதைக் கேட்டதும், அந்த ஊர்க் காவலர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள், “பின்னே? ஆர்ஜென்டினா சரக்குன்னா சும்மாவா?” என்று நமுட்டுச் சிரிப்புடன் பெருமையடித்துக் கொண்டார்கள்.

இந்தக் களேபரத்தில், அவர்கள் யாரும் அடாலஃப் ஐக்மெனைக் கவனிக்கவில்லை, “இனி மேலாவது கொஞ்சம் பார்த்துக் குடிங்கப்பா” என்று பொதுவாக அட்வைஸ் பண்ணி வழியனுப்பி விட்டார்கள்.

உள்ளே ஐக்மெனுக்காக ஓர் இஸ்ரேலிய ஏர்லைன்ஸ் விமானம் காத்திருந்தது. அரை மயக்க நிலையிலேயே அவரை மேலே ஏற்றி யார் கண்ணிலும் படாமல் ஒளித்துவைத்துவிட்டார்கள்.



அப்போதும், மொசாட் ஏஜென்ட்களுக்கு முழு நம்பிக்கை வரவில்லை. எந்த நேரத்தில் மறுபடி பொலிஸ் வருமோ என்று கொஞ்சம் திகிலோடுதான் உட்கார்ந்திருந்தார்கள்.

ஆனால், அவர்கள் நினைத்ததுபோல் எந்த திடீர்ப் பரிசோதனையும் நடக்கவில்லை, விஸ்கி நாடகம் பிரமாதமாக வேலை செய்திருந்தது.

சிறிது நேரத்தில், அவர்களுடைய விமானம் புறப்பட்டது. பல வாரங்களுக்குப்பிறகு முதன்முறையாக மொசாட் ஏஜென்ட்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து, இஸ்ரேல் பிரதமர் டேவிட் பென் குரியன் அந்த நாட்டுப் பாராளுமன்றத்தில் பெருமையுடன் அறிவித்தார், “நாங்கள் அடாலஃப் ஐக்மெனைக் கைது செய்து விட்டோம்“

ஹிட்லர் காலத்துக்குப்பிறகு காணாமலே போய்விட்ட ஐக்மெனை மறுபடிக் கண்டுபிடித்துக்கைது செய்தது பெரிய விடயம்தான். ஆனால், அதற்காக மொசாட் நடத்திய கடத்தல் நாடகமெல்லாம் வெளியே தெரிந்த போது, அது பெரிய பிரச்சினையாகிவிட்டது.

உடனடியாக, அர்ஜென்டினா அரசாங்கம் பெரிய எழுத்துகளில் அலறியது, “இது மனித உரிமை மீறல், எங்கள் எல்லைக்குள் வந்து, எங்கள் நாட்டுக் குடிமகன் ஒருவரைக் கடத்தியிருக்கிறீர்கள், ஒழுங்காக ஐக்மெனைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்”

“ம்ஹூம், சான்ஸே இல்லை“ என்றது இஸ்ரேல் அரசாங்கம்” அவர் மீது முறைப்படி வழக்கு நடத்துகிறோம், ஐக்மென் தப்பு செய்திருப்பது நிரூபிக்கப்பட்டால், அதற்கு ஏற்பத் தண்டனை கொடுப்போம்”

சொன்னபடி, அடால்ஃப் ஐக்மெனை நீதிமன்றத்தின் முன் நிறுத்தியது இஸ்ரேல். அவரை ஒரு குண்டு துளைக்காத கூண்டுக்குள் பத்திரமாக உட்காரவைத்துவிட்டு, ஹிட்லர் ஆட்சியின்கீழ் அவர் செய்த அக்கிரமங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் புட்டுப்புட்டு வைத்தார்கள்.

சென்ற நூற்றாண்டின் மிகப் பிரபலமான வழக்குகளில் ஒன்று அது. லட்சக்கணக்கான அப்பாவி யூதர்களுக்கு ஐக்மென் செய்த கொடுமைகளெல்லாம் வெளியே தெரிந்தபோது, “இப்படியெல்லாம்கூட ஒரு மனிதனால் கொடூரமாக யோசிக்க முடியுமா“ என்று உறைந்து போனது உலகம்.

அடால்ஃப் ஐக்மென் எதையும் மறுக்கவில்லை. ஆனால், “இதெல்லாம் நான் விரும்பிச் செய்தது இல்லை யாரோ அதிகாரிகள் சொன்னார்கள், நான் நிறைவேற்றினேன், அவ்வளவுதான்” என்று கதையைத் திருப்பிப்போட்டார்.

ஆனால், இந்தக் கடைசி நேர நாடகம் பலிக்கவில்லை. பல லட்சம் யூதர்களின் மரணத்துக்கு அடால்ஃப் ஐக்மென் நேரடிக் காரணமாக இருந்திருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது. நீதிபதிகள் அவருக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

ஐக்மென் கடத்தல் விவகாரத்துக்குப்பிறகு உளவுத்துறையினர் மத்தியில் மொசாட்டின் இமேஜ் கன்னாபின்னாவென்று எகிறிவிட்டது. பின்னே? தங்களுக்கு முன்பின் பரிச்சயமே இல்லாத ஒரு வெளிநாட்டுக்குப் போய், ரகசியமாக ஒரு நபரைக் கடத்திக் கொண்டு வருவது என்றால் சாதாரண விடயமா? இன்றைக்கு அர்ஜென்டினா அதிகாரிகள் கண்ணில் மண்ணைத் தூவியவர்கள், நாளைக்கு இன்னும் எங்கெங்கே என்னென்னவெல்லாம் செய்வார்களோ? பல நாடுகள் மொசாட்டைப் பிரமிப்புடனும், கொஞ்சம் பயத்துடனும் பார்க்க ஆரம்பித்தார்கள்.

**11.ரகசிய வேட்டு**

அந்தப் புனிதச் சுவரின் முன்னால் அமைதியாக ஒரு கூட்டம் சேர்ந்து கொண்டிருந்தது.

விதவிதமான முகங்கள், வெவ்வேறு தொழில்களைச் செய்கிறவர்கள், பணக்காரர்கள், அன்றாடங்காய்ச்சிகள், கொழுத்தவர்கள், மெலிந்தவர்கள் என எல்லா வகை மக்களையும் அங்கே பார்க்க முடிந்தது. அனைவரும் ஒரே மாதிரியாக உடுத்தியிருந்தார்கள், பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

யூதர்களைப் பொறுத்தவரை, அது வெறும் சுவர் அல்ல பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இதே இடத்தில் கம்பீரமாக நின்று கொண்டிருந்த ஓர் ஆலயத்தின் அடையாள மிச்சம். அவர்களுடைய மதத்தை ஒருங்கிணைத்த, கட்டுக் கோப்புடன் வைத்திருக்கிற புனிதச் சின்னம்.

ஜெருசலேம் நகரில் இந்த ஆலயத்தை அமைத்தவன், ஹெரோத் என்கிற யூத அரசன். அந்தக் காலத்தில் யூதர்களின் பெருமைக்குரிய புண்ணியத் தலமாக மதிக்கப்பட்ட கோவில் அது.

கி.பி. எழுபதாம் வருடம், அங்கே படையெடுத்து வந்த ரோமானியர்கள் இந்தக் கோவிலைதான் குறிவைத்துத் தாக்கினார்கள். உள்ளே இருந்த விலை மதிக்க முடியாத பொருட்களையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு, ஆலயத்தையும் இடித்துத் தள்ளிவிட்டார்கள்.

இந்த அக்கிரமத்தைத் தடுப்பதற்கு யூதர்கள் எவ்வளவோ போராடினார்கள். ஆனால் ரோமானியப் படைகளின் வெறித்தனத்துக்கு முன்னால் அவர்களால் எதுவும்செய்ய முடியவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலி இராஜ...

சுதந்திரமாகச் சென்று வழிபட முடியவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கோவிலுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கி இன்னமும் உத்தியோகபூர்வ கடிதம் வழங்கப்படாமையால், எந்நேரமும் ஆலயத்திற்கு செல்வதனை இராணுவத்தினர் தடை விதிக்கலாம் என்ற அச்சம் தமக்கு உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அப்பகுதி மக்கள்,

பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு 35 வருடங்களின் பின்னர், கட்டுப்பாடுகள் இன்றி வழிபடக் கடந்த 27ஆம் திகதி அனுமதித்த இராணுவத்தினர், மீண்டும் 28ஆம் திகதி பாதுகாப்பு காரணங்கள் எனக்கூறி ஆலயத்திற்குச் செல்ல அனுமதி மறுத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை முதல் தினமும் காலை 06 மணி முதல் மாலை 06 மணி வரை தற்காலிகப் பாதை ஊடாகச் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அடுத்து வரும் வாரம் ஆலயத் திருவிழாக் காலம் என்பதனால், ஆலயச் சூழலை துப்புரவு செய்து திருவிழா ஏற்பாடுகள் நடக்கின்ற போதிலும், மீண்டும் இராணுவத்தினர் தடை விதிப்பார்களோ என்ற அச்சத்துடனையே துப்புரவு பணிகளை முன்னெடுத்து வருகிறோம். அத்துடன் ஆலயத்திற்கு நேரக் கட்டுப்பாட்டுடன் அனுமதிப்பதனால், திருவிழாவைச் சிறப்பாகச் செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது. எனவே நேர கட்டுப்பாட்டை முற்றாகத் தளர்த்தி சுதந்திரமாக அம்மனை வழிபட இராணுவத்தினர் அனுமதிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர். (ந-7)

## அர்ஜுன...

அர்ஜுன மகேந்திரன், தற்போது சிங்கப்பூரில் உள்ள "விஸ்டம் ஓக்" என்ற முன்னணி முதலீட்டு நிறுவனத்தில் உயர் பதவியில் உள்ளதாக செய்திகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவர் இந்த நிறுவனத்தில் முதலீட்டு நிபுணராகப் பணியாற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிறுவனத்தில் அவர் செய்த பணிக்காக பல சர்வதேச விருதுகளை வென்றுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

2016இல் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை விட்டு விட்டு, பிணைமுறி மோசடி காரணமாக சிங்கப்பூர் சென்ற மகேந்திரனை நாட்டுக்கு மீண்டும் அழைத்துவர அரசாங்கம் முயற்சித்தது.

எனினும் சிங்கப்பூர் அரசு அதனை தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மூளாயில் இரு...

நேற்று முன்தினம் (19) அப்பகுதியில் தனி நபர்களுக்கிடையே ஏற்பட்ட தாக்குதல் சம்பவம் பொலிஸில் முறைப்பாடு செய்யுமளவுக்குச் சென்றிருந்தது.

இரண்டு தனிநபர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு இருவர் சார்பான இரு குழுக்களுக்கிடையேயான கலவரமாக மாறியபோது மோதல் வெடித்தது.

மோதலின்போது ஒரு மோட்டார் சைக்கிள் தீ வைத்து எரிக்கப்பட்டதுடன் இன்னொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்டது. இதனால் சிலர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது அந்தப் பகுதியின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் எந்தவிதமான கலவரமும் ஏற்படாதவாறு பொலிஸார் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிந்திக் கிடைத்த தகவலின்படி அப்பகுதியில் விசேட பொலிஸ் அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் களமிறக்கப்பட்டுள்ளனர். (ந-7,ம-04)

## செம்மணி...

பணங்களை ஆராய்ந்த யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா அகழ்விற்கான இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

இந்நிலையில், இன்று முதல் எதிர்வரும் 15 நாட்களுக்கு மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மனித புதைகுழியின் முதலாம் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டத்தின், முதலாவது சுற்று அகழ்வுப் பணிகளின்போது 65 என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதில் சிறார்கள் மற்றும் பெண்களின் என்புக்கூட்டுத் தொகுதிகளும் மீட்கப்பட்டன. அத்துடன் பொம்மை, புத்தகப்பை உட்பட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், இந்த அகழ்வுப் பணி தொடர்பில் இறுதியாக நடைபெற்ற நீதிமன்ற வழக்கு விசாரணையின் போது, செம்மணி - சித்துப்பாத்தியில் குற்றச்செயல் இடம்பெற்றுள்ளதாகத் தொல்லியல்துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

இந்த பின்புலத்தில் அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ள செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழியின் அகழ்வு இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் சுற்று இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. (ந-7)

## சம்...

ருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பூர் - சிறுவர் பூங்காவை அண்டிய கடற்கரைப் பகுதியில் கடந்த 16ஆம் திகதியிலிருந்து மெக் நிறுவனத்தினால் மிதிவெடி அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) மூன்றாவது நாளாக இப்பணி முன்னெடுக்கப்பட்டபோது, மனித மண்டையோடு ஒன்றும் கால் எலும்புத் துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து மெக் நிறுவனத்தினால் சம்பூர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதுடன் மிதிவெடி அகற்றும் பணி தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சம்பூர் படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியை அண்மித்த பகுதியில் அகழ்வுப் பணி மேற்கொண்டபோதே மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## நிறைவேற்று...

தவிர, புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக, நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என்ற கருத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்வைத்திருந்தபோதிலும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் தற்போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது செய்வதற்கான ஒரு திட்டத்தை ஜனாதிபதி அநுர விரைவில்முன்வைக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.(ந-7)
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடவையகத்தில் தீ விபத்து சுன்னாகத்தில் சம்பவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதியில் உள்ள புடவையகத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் 1 கோடி ரூபா விற்கும் அதிக பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமானதாக தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த கடையில் வியாபாரம் நிறைவடைந்த பின்னர் பணியாளர் ஒருவர் கடையை பூட்டிவிட்டு வீடு சென்றுள்ளார். அங்கு சுவாமி படத்திற்கு ஏற்றிய தீபத்தில் இருந்து தீப்பற்றியதில் கடை பெருமளவு எரிந்து நாசமாகியுள்ளது.

இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,104)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3462)
076 825 7716 (ஆகாஸ்)

மாப்பிள்ளை தேவை
01. கந்தர்மடம், இந்து, 2002, பூரட்டாதி, BSc, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53813)
02. யாழ்., இந்து, 1997, கார்த்திகை, MSc, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53836)
03. கைதடி, இந்து, 1998, விசாகம், Double Degree, New Zealand Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
04. அல்வாய், இந்து, 1993, ரேவதி, Bachelor of Engineering (Auckland), Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53766)
05. நல்லூர், இந்து, 1992, அவிட்டம், Bachelor Degree, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53581)
06. அளவெட்டி, இந்து, 1999, உத்தரம், Chef, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53256)
07. பருத்தித்துறை, இந்து, 1996, அவிட்டம், MSc, Norway Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53101)
08. சாவகச்சேரி, இந்து, 1998, அத்தம், Double Degeree, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளைதேவை. (51044)
09. நல்லூர், இந்து, ஆயிலியம், 1994, chartered accountant, Divorce, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33133)
10. சித்தங்கேணி, இந்து, 1999, கேட்டை, MSc, Phd, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49678)
எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (1347)
S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728 (1313)

விற்பனைக்கு
குதிரை போட் 25 H.P Susiki
32 Pcs சூடை வலை முற்றிலும் புதியவை (தயார் நிலையில்)
சிறு கழிவுடன் விற்பனைக்கு (4835)
077 357 3055
வல்வெட்டித்துறை

விசேட சலுகைகள்
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
UK - 1320/=
Australia - 2220/=
France - 2080/=
Canada - 2570/=
Germany - 1920/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மல்லாவி (1349)

பெற்றோர், மாணவர்களின் தெரிவு...
A/L - 2027 கணக்கீடு
Mr.BALAKAJEN
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்
● ஆரம்ப தேர்ச்சியிலிருந்து கற்பிக்கப்படும்.
● புதிய அனுமதி வழங்கப்படும்.
KBK கந்தர்மடம் கொழும்புத்துறை
online classes
077 452 0043
A/L 2025, A/L 2026புதிய அனுமதி வழங்கப்படுகின்றன. (C-3435)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

வந்துவிட்டது... இப்பொழுது விற்பனையில்
பூமாலை
POOMALAI
தரம் 4,5
பூக்களில் வெவ்வேறு வாசனைகள், வெவ்வேறு வடிவங்கள், வர்ணங்கள் பல விதம், அதுதான் பூமாலை!
தேசிய ரீதியில் கற்பித்தலில் முன்னணி வகிக்கும் 12 ஆரம்பக்கல்வி ஆசிரியவளவாளர்களினால்
12 எதிர்பார்க்கை வினாத்தாள்கள், விடைகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது
விலை 950/-
UNILANKA'S PUBLICATION
No. 326, Sea Street, Colombo - 11. Hotline : 077-6258778 What'sapp : 077-6258778 / 077-7220324



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
இந்தியன் செலக்ஷனின்
ஆடி மாத அதிரடித் தள்ளுபடி





திருமணப் பட்டுச்சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
ரெடிமேட் சல்வார்கள்
பார்ட்டி புறொக்
டொப்
கவுண்
ஸ்கேட், பிளவுஸ்
சேட், ரீசேட்
பெட்சீற்
மொடர்ன் ட்ரெஸ்
வேஷ்டிகள்
லெகீன்ஸ்
லெஹங்கா
சிறுவர்களுக்கான ஆடைகள்
மற்றும் தாராளமான ஆடைத் தெரிவுகள்
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் : 12.07.2025 முதல் 05.08.2025 வரை
(வாரத்தில் 07 நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்) (1348)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-3463)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1400/- France 11Kg - 2200/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- Australia 11Kg - 2130/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வீடு வாடகைக்குண்டு
நல்லூர் அரசடி வீதியில் சிறிய குடும்பம் வசிக்க கூடிய மேல் மாடி வீடு மட்டும் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : (4851)
077 049 1513

தேவை
கச்சேரி, சுண்டிக்குளி ஆகிய இடங்களுக்கு அண்மித்த பிரதேசத்தில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு : (4854)
077 695 4530

வெளிவந்து விற்பனையாகிறது
Physics - Essay - M.C.Q
Chemistry - M.C.Q
Questions and Answers (English Medium)
Pesuru Prakashana
Physics - S.R.JEYAKUMAR - M.C.Q, ESSAY - Past paper
தரம் 4 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்
இலங்கையில் பிரபல்ய மூத்த முன்னணி ஆசிரியர்
P.அம்பிகைபாகன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P 021 222 6693
இல.212, 1ம் குறுக்குத்தெரு, வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம். T.P 021 222 1637 (C-3461)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org